**அனுப்புநர்** **பெறுநர்**

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

செய்திஆசிரியர்

**ந.க.எண். 041612/எச்.1/2019** **நாள் :23.07.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மேல்நிலை முதலாமாண்டு (+1 Arrear) / இரண்டாமாண்டு பொதுத் தேர்வு, ஜுன் 2019 – விடைத்தாள் நகல்கள் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் – மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல் – செய்திக் குறிப்பு வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

-----

ஜுன் 2019 மேல்நிலை முதலாமாண்டு (+1 Arrear) / இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி விடைத்தாள் நகல்கோரி விண்ணப்பித்த மாணவர்களுக்கு விடைத்தாட்கள் நகலினை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்வது, மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல் தொடர்பான செய்திக் குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதனை அனைத்து மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் தங்கள் வானொலி / தொலைக்காட்சி / செய்தித்தாளில் செய்தியாக வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

''இது விளம்பரம் அல்ல'' எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**தங்கள் நம்பிக்கையுள்ள,**
**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு:**செய்திக் குறிப்பு

**நகல்:**

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து முதன்மை / மாவட்டக் கல்விஅலுவலர்கள்.
3. கண்காணிப்பாளர், எச்.3 பிரிவு (அலுவலகம்).

## அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை – 600 006

## மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு ஜுன் 2019

## விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல்

## மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்

## செய்திக் குறிப்பு

ஜுன் 2019, மேல்நிலை முதலாமாண்டு (+1 Arrear) / இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி விடைத்தாட்களின் நகல் கோரி விண்ணப்பித்த தேர்வர்கள் **24.07.2019 (புதன்கிழமை) முற்பகல் காலை 10.00 மணி** முதல் **scan.tndge.in** என்ற இணையதளத்திற்குச் சென்று தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாட்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு மறுகூட்டல் – II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால், இதே இணையதள முகவரியில் "Application for Retotalling/Revaluation" என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

இவ்விண்ணப்பப் படிவத்தினை, பூர்த்தி செய்து இரு நகல்கள் எடுத்து **25.07.2019 (வியாழக்கிழமை) காலை 10.00 மணி முதல் 26.07.2019 (வெள்ளிக் கிழமை) மாலை 5.00 மணிக்குள்** உரிய முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

**மறுமதிப்பீடு**

| | |
|---|---|
| பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ. 505/– |

**மறுகூட்டல்**

| | |
|---|---|
| உயிரியல் பாடம் மட்டும் | – ரூ.305/– |
| ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ.205/– |

**ஒம்/–**
**இயக்குநர்**

நாள் :23.07.2019.
இடம் : சென்னை – 600 006.